1982 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிட வேலை துவக்கப்பட்டு விட்டது. மிக விரைவில் முடித்து விட வேண்டுமென்று அரசு உத்தர விட்டுள்ளது. வழக்குரைஞர்களுக்குத் தனியாக ஒரு கட்டிடம் கட்டுவதற்கு அரசு தனியாக அதைப் பரிசீலிக்கும்.

சிமென்ட் ஆலைகளில் நடத்தப்பட்ட சோதனை.

*வினா எண் 30—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாநிலத் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் 14–10–1981 அன்று தமிழகத்திலுள்ள சிமெண்ட் ஆலைகளில் சிமெண்ட் மூட்டைகளின் எடை அளவுச் சோதனை நடத்தினார்களா?

(ஆ) ஆம் எனில், சோதனையில் என்னென்ன தவறுகள் எந்தெந்த தொழிற்சாலைகளில் கண்டுபிடிக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) சோதனையில் சிமெண்ட் மூட்டைகளில் எடை குறைவு கீழ்க்கண்ட தொழிற்சாலைகளில் கண்டு பிடிக்கப்பட்டது :—

(1) செட்டி நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், கரூர்,

(2) தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், அரியலூர்.

(3) மெட்ராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட், துலுக்கபட்டி.

(4) அசோசியேடெட் சிமெண்ட் கம்பெனி லிமிடெட், மதுக்கரை.

(5) இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், திருநெல்வேலி மற்றும்

(6) டால்மியா சிமெண்ட்ஸ் லிமிடெட், டால்மியாபுரம்.

திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமென்ட் மூட்டைகளின் எடை குறைவை மாநில அதிகாரிகள் ஆலைகளில் கண்டுபிடித்தாலும் அல்லது தனிப்பட்ட டீலர்களிடம் கண்டுபிடித்தாலும் அவர்கள் சிமென்ட் சணல் பைகளில் கட்டப் படுவதால் இதுபோன்று எடை குறைவு ஏற்பட்டு விடுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, உரிய

அளவில் சிமெண்ட் கிடைக்கிற வகையில் சிமெண்ட்டை பாலீதின் பைகளில் அடைத்து வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய நிறுவனமாக இருக்கிற தமிழ் நாடு சிமெண்ட்ஸ் பொறுத்தவரைக்கும் இதுபோன்ற உத்தரவை அரசால் இட இயலும். மற்ற சிமெண்ட் ஆலைகளைப் பொறுத்தவரையில் அதற்கு உரிமம் கொடுக்கிற அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிறதால் மத்திய அரசிடம் கலந்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் மூட்டைகளில் அளவு குறைவாக இருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அரசாங்க ஆலைகளில் அப்படி எடைக்குறைவு ஏற்பட்டிருக்கிறதா? அப்படி ஏற்பட்டிருந்தால் அதை நிவர்த்தி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச்சொந்தமான சிமெண்ட் நிறுவனம் ஒன்றே ஒன்று தான் இருக்கிறது. தமிழ் நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் என்பதாகும். அதைப் பொறுத்தவரையில் 4 மூட்டைகளில் மட்டும் எடைக்குறைவு காணப்பட்டது. தனியார் சிமெண்ட் ஆலைகளில் எடைக்குறைவு அதிகமாக இருக்கிறது. சம்பந்தப் பட்ட அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. தனுக்கோடித்தேவர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சிமெண்டைப் பொறுத்தவரையில் தனியார்கள் சிமெண்டை மூட்டைகளிலிருந்து எடுத்துவிட்டு சாம்பல் போன்றவற்றை நிரப்பிக் கொடுத்துவிடுகிறார்கள். இதனால் சிமெண்ட் வாங்குகிறவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள், இப்படித் தவறு செய்பவர்களின் பெர்மிட்டையே கேன்சல் பண்ணி விடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட்டில் கலப்படம் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

1982 செப்டம்பர் 8]

(முற்பகல் 9-40)

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது சிமென்டினுடைய விலையை ஒன்றுக்கு மூன்றாக, ஏறக்குறைய ரூ. 32 வரையில் உயர்த்தி விட்டார்கள். அப்படி இருக்கும்போது ஆலைகளிலே சோதனை செய்யும்போது எடைகளிலும் குறைவு இருக்கிறது. தமிழகத்திலே இருக்கிற அத்தனை ஆலைகளிலும் ஒன்றிரண்டு தவிர, எடைகளில் குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறதே அதன்மீது நடவடிக்கை எடுக்க மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா? மத்திய அரசாங்கம் தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமா? மாநில அரசாங்கமே நடவடிக்கை எடுக்க முடியுமானால், கடுமையான நடவடிக்கை எடுத்து, எடை குறையாமல் இருக்க உத்தரவாதம் பெற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசே நடவடிக்கை எடுக்கலாம். அப்படி நடவடிக்கை எடுக்கும்போது, தற்போது இருக்கிற சட்ட விதியின் அடிப்படையில் ரூ. 550 வரைக்கும்தான் அவர்களுக்குத் தண்டனை விதிக்கலாம். அதுவும் ரூ. 500 உச்சகட்டமாக இருக்கிற தண்டனை. ரூ. 5, ரூ10 தண்டனை பெற்று அவர்கள் விடுபட வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அந்தச் சட்டத்தைத் திருத்தவும் அரசு தற்போது முடிவு செய்துள்ளது.

திருச்சி ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரியின் உள்ளே செல்லும் பெரியகழிவு நீர் அகழி.

*வினா எண் 3|—திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி நகரில் ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரியின் உள்ளே நகரின் மிகப்பெரிய கழிவுநீர் அகழி செல்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதை அங்கிருந்து அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) தற்சமயம் நடைபெறும் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகள் முடிவடைந்து, வீட்டு இணைப்புகள் கொடுத்த பிறகு, மேற்படி கழிவு நீர் அகழியைத் தூர்ப்பது பற்றி ஆராயப்படும்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டம் திருச்சி மாவட்டத்திலே முடிவடையக்கூடிய காலத்தில் இது திறக்கப்படும் என்கின்ற முறையிலே அமைச்சர் அவர்கள் பதில் அளித்துள்ளார்கள். அந்தப் பாதாள சாக்கடைத் திட்டம் எப்போது முடிவடையும் என்பதை அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவிக்க இயலுமா?

TRUTH ALONE TRIUMPHS